சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – கல்வி – மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட 2013–2014 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பு – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப் பண்பு மேம்பாட்டுப் பயிற்சி (Managerial Skill Development) அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 80 நாள் : 18.10.2013

விஜய ஐப்பசித்திங்கள் 1 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது :

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். எ1/12958/2013,
நாள் 01.07.2013 மற்றும் 18.07.2013.

********

ஆணை:–

02.05.2013 அன்று சட்டமன்றப் பேரவையில் 2013–2014 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கையில் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பாக புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் கீழ்க்கண்ட அறிவிப்பும் அடங்கும்:–

> "இத்துறையின் கீழ் இயங்கும் 203 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களின் தலைமைப் பண்பினை மேம்படுத்தும் (Managerial Skill Development) வகையில், நபர் ஒருவருக்கு தலா ரூ.5000/– வீதம் மொத்தம் ரூ.10.00 இலட்சம் செலவில், 203 தலைமை ஆசிரியர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் மூலமாக 5 வேலை நாட்களில் தலைமைப் பண்பு மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்."

மேற்கண்ட புதிய அறிவிப்பினைச் செயல்படுத்துவதன் பொருட்டு, விரிவான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்கும்படி ஆதி திராவிடர் நல இயக்குநர் கோரப்பட்டார்.

2) மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதி திராவிடர் நல இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 100 மேல்நிலைப்பள்ளிகள், 103 உயர்நிலைப்பள்ளிகள் இயங்கி வருகின்றன என்றும், இதில் 8150 மாணவ / மாணவியர்கள் பயின்று வருகின்றனர் என்றும், இத்துறையின் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவியர்கள், பொதுப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவியர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைந்த மதிப்பெண்களே பெற்று வருகின்றனர் என்றும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் பெரும்பாலும் பின்தங்கிய பகுதிகளிலேயே அமைந்துள்ளன என்றும், இதில் படிக்கும் மாணவ / மாணவியர்களுக்கு போதிக்கும் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்துவதற்கு வழிகாட்ட ஏதுவாக அனைத்து உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப் பண்பினை மேம்படுத்தும் வகையில் பயிற்சி அளிக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப் பண்பினை மேம்படுத்தும் பயிற்சி அளிக்கப்பட்டால் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்தலாம் என்றும், இதனால் இத்துறைப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ / மாணவியர்கள் கல்வியில் பெரும் முன்னேற்றம் அடைவார்கள் என்றும், மேலும் பிற மாணவர்களோடு போட்டித் தேர்வுகள், மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளில் பங்கு பெறுவது எளிதாக இருக்கும் என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 203 உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப் பண்பு மேம்பாட்டு பயிற்சி அளிக்க, 30 நபர்கள் கொண்ட ஒரு குழுவிற்கு பயிற்சிக் கட்டணமாக ரூ.1,76,250/– அண்ணா மேலாண்மை நிலையத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், பயிற்சி பெற உள்ள 203 நபர்களையும், சிறப்பினமாக, 33 முதல் 35 நபர்கள் கொண்ட 6 குழுக்களாகப் பிரித்து, அனைவருக்கும் பயிற்சி அளிக்கப்படும் என்றும், இவ்வாறு 6 குழுக்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான மொத்தக் கட்டணம் ரூ.10,57,500/– ஆகும் என்றும் தெரிவித்து, மேற்கண்ட தொகையினை ஒப்பளிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4) ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில், ஆதி திராவிடர் நல இயக்குநரின் கோரிக்கையை ஏற்று, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 203 உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் மூலமாக 2013–2014 ஆம் கல்வியாண்டில் 5 வேலை நாட்கள் தலைமைப் பண்பு மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்தும், இந்தப் பயிற்சித் திட்டத்திற்கான செலவினமாக ரூ.10,57,500/– (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. பயிற்சி பெற இருக்கும் தலைமை ஆசிரியர்களின் பயணப்படி / தினப்படியைப் பொறுத்தவரையில், அவர்கள் ஊதியம் பெறும் கணக்குத் தலைப்புகளின் கீழ் இந்தச் செலவினத்தை மேற்கொள்ள ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி – I – திட்டத்தில் சேராதது – AA– பள்ளிக்கல்வி – 72 – பயிற்சி
(து.தொ.கு.2225 01 277 AA 7208)"

6) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான தொகையினை முன்பணமாகப் பெறுவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில், இவ்வாணையின் படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினம் குறித்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2013–2014 ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானியக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (ஆதி (ம) பந/வரவு செலவு பொது I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை பெற்று வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8) தலைமை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதும், திட்டம் செயல்படுத்தப்பட்டது குறித்த அறிக்கையினை தவறாமல் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9) இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 57189/ஆதி(ம)பந/13, நாள் 15.10.2013 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1643 (ஆயிரத்து அறுநூற்று நாற்பத்து மூன்று)–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.
இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை – 28.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசுச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது I /
வரவு–செலவு பொது II) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 18/10/13
18/10/2013